
# ராஜாவின் ராகங்கள்



பிரியாலயம் துரைஸ்

# ராஜாவின் ராகங்கள்

(இசைப்பாடல்கள்)

## பிரியாலயம் துரைஸ்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
79, AV. DES M. DE CHATEAUBRIANT,
93700 DRANCY,
FRANCE.

- ராஜாவின் ராகங்கள்
  (இசைப் பாடல்கள்)
- -பிரியாலயம் துரைஸ்
- உரிமைப் பதிப்பு
- வெளியீடு: ரஜனி பதிப்பகம்
- அச்சுப்பதிப்பு: கலையரசர் அச்சகம்
  பாரிஸ் 48 46 0.7 40
- வடிவமைப்பு: நந்தினி



முத்தமிழில் சத்தெடுத்து - அதில்
முதற் குருவை இணைத்திட்டு - தனை
பத்திரமாய் பதமாக்கி - பின்
சிற்றுருவாய் எனை வடித்து - தன்
திருமகனாய் மடி தவழ - பின்
உரியவனாய் திடமளித்து - நல்
அற்புதமாய் கலை ஊட்டி - அதில்
விற்பனனாய் நான் வளர - பல
நித்திரையை மறந்திட்டு - தன்
சத்துதனை எனக்கூட்டி - மண்ணில்
அச்சடித்த காகிதத்தின் - அழகு
சித்திரத்தை எனக்குரைத்து - யான்
உங்களில் ஒருவனாய் வாழ வைத்து
உயர்வளித்த - என்
உயிரின் கருவே
கருவின் ஒளியே.

யார் யார் நா எம்மொழி பேசினும் - அது
அவர் அவர் திறமை என்பேன் - அஃது
எம் மண்ணில் வாழ்ந்தாலும்
தம் தாய்மொழி மறந்து
தம்மவருடன் பிறமொழி பேசுதல்
பெரும் கொடுமை என்பேன்.

- **துரைஸ்**

# அணிந்துரை

மாதா, பிதா, குரு , தெய்வம்
மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் வழிபடுவதற்கு எம் முன்னோர்களால் வகுக்கப்பட்ட வழிமுறைகள் இதுவாகும்.
என்னிடம் கல்வி பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்களில் அநேகமானவர்கள் உயர்ந்த நிலையில் தான் இருக்கின்றார்கள்.
அவர்கள் எல்லோரையும் என் நினைவில் வைத்துக் கொள்ள முடியாவிட்டாலும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சிலர் என் மனதை விட்டகலாது என்றும் என் நினைவிலேயே நிற்கின்றார்கள். அவர்களில் தம்பி ஐயாத்துரை துரைராஜாவும் ஒருவர்.
அதற்கு முதற்காரணம் நான் மேலே குறிப்பிட்டது போல தன்னுடைய பெற்றோர்களுக்குப் பின் குருவிற்கு மதிப்பளிக்கும் பெரும் குணம் தம்பி துரைஸ் இடம் குடிகொண்டிருந்தது மட்டுமல்ல. தம்பி துரைஸ் அவர்களின் இளவயதுக் காலங்களை நான் பாடசாலையின் அதிபராக இருந்து மட்டுமல்ல தனிப்பட்ட முறையிலும் அவதானித்து இருக்கிறேன். இவர் எல்லோருடனும் இன்முகத்துடன் பழகும் முறையும் பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் பண்பும் இவரை எல்லோருக்குமே பிடித்தவராக்கிற்று. அதற்கு நான் கூட விதிவிலக்கல்ல.
பாடசாலையில் பல நாடகங்களில் பல தரப்பட்ட வேடங்களில் நடித்து தான் ஒரு சிறந்த கலைஞன் என்று அன்றே நிரூபித்திருக்கின்றார்.
அது மாத்திரமல்ல கணீரென்ற தன் மணிக்குரலினால் மேடைகளில் நிகழ்ச்சிகளை தொகுத்தளிக்கும் திறனைக் கண்டு நான் பலமுறை வியந்திருக்கிறேன்.

புகழ் பெற்ற ஈழத்து வானொலி அறிவிப்பாளர்களைப் போல இவர் நிகழ்த்திய பல்குரல் நிகழ்ச்சிகளை நான் பாராட்டி இருக்கிறேன். சமூக சீர்திருத்த கருத்துக்களைக் கொண்ட நாடகங்கள் பலவற்றை மக்களுக்கு கொடுத்திருக்கின்றார். இவர் நடித்த சுவீப் சுந்தரம்பிள்ளை என்ற நாடகம் மக்களை சிரிக்க வைத்ததோடு சிந்திக்கவும் வைத்தது. இப்படி தன் இளம் வயதிலேயே கலையை வெறும் பொழுது போக்காக் கொள்ளாது கருத்தோடு மக்க ளுக்கு கொடுத்து வந்தது இவர் மக்கள் மீது வைத்த மதிப்பைக் காட்டுகின்றது.

காலம் பல்லாயிரம் மைல்களை கடந்து ஐரோப்பிய மண்ணில் எம்மை சந்திக்க வைத்திருப்பது விந்தை தான்.

இதை விட பெரிய விந்தை என்னவென்றால் பிறந்த மண்ணை விட்டு ஐரோப்பா வந்த பலர் தாம் பிறந்து வளர்ந்த மண்ணை மறந்து பண்பாடுகளை மறந்து ஏன் நம் சமூகத்தையே மறந்து வாழ்கின்றார் கள். ஆனால் இன்று பலதுறைகளில் புகழ் பெற்று உயர்ந்த நிலையில் இருக்கும் தம்பி பிரியாலயம் துரைஸ் நான் அன்று கண்ட ஐயாத்துரை துரை ராஜா வாகவே இன்றும் வாழ்கின்றார்.

இவருடைய கலைப்படைப்புக்கள் பலவற்றை இங் கும் மேடைகளிலும் வீடியோ நாடகங்களிலும் பார்த்து ரசித்திருக்கிறேன். இவர் எழுதிய பாடல் கள் பலவற்றை இசையோடு கேட்டு மகிழ்ந்திருக் கிறேன். அதற்கும் மேலாக " சிரித்திரு" என்ற பத்திரிகையை சில காலம் இவர் நடாத்திய போது அந்த பத்திரிகையில் வெளிவந்த நகைச்சுவைத் துணுக்குகளில் கூட நல்ல சீர்திருத்த கருத்துக் களை புகுத்தி மக்களை சிந்திக்க வைத்ததை யாரும் மறக்கமுடியாது.

இவையெல்லாம் இவர் கலைமூலம் தன் எழுத்து மூலம் தான் மதிப்பு வைத்திருந்த மக்களுக்கு நல்ல கருத்துக்களை ஊட்ட முயன்றதின் பிரதிபலிப்பே. கிளிநொச்சி மண்ணிற்கு பாரிசில் நற்பெயரை தேடிக் கொடுத்துக் கொண்டிருக்கும் சிலரில் தம்பி துரைஸ் குறிப்பிடத்தக்கவர்.

இந்தப் புத்தகங்களில் உள்ள பாடல்களில் பல காதல் கதைகளை கூறினாலும் தாயக நினைவுப் பாடல்களும், விடுதலை உணர்வுப் பாடல்களும் இதனுள்ளே அடங்கியிருக்கின்றது.

இன்று எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் ஏராளமான உயிர்களை பலி கொடுத்து மண்ணின் விடுதலைக்காக எம் இளைஞர்கள் அங்கு போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அந்நிய மண்ணில் வாழும் எம் கலைஞர்கள் தங்கள் எழுத்துக்களில் கலை வடிவங்களில் எம் தேச விடுதலையை வலியுறுத்துவது அவசியம்.
தொடர்ந்து வரும் காலங்களில் தம்பி துரைஸ் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.
அண்மையில் இவரின் தந்தையார் திரு. ஐயாத்துரை அவர்கள் காலமான செய்தி எம்மை சோகத்தில் ஆழ்த்தினாலும்,
"மகன் தந்தைக்கு ஆற்றும் நன்றி,
இவன் தந்தை எந்நோற்றான் கொல் ?எனும் சொல்"
என்ற குறளுக்கமைய பெற்றவர்கள் பெயருக்கு பெருமை சேர்க்கும் இந்த தம்பியின் "ராஜாவின் ராகங்கள்" நூல் திரு. ஐயாத்துரை அவர்களுக்கு சமர்ப்பணமாகட்டும்.

சி. காராளபிள்ளை

## மதிப்புரை

**சுகமான ராகங்கள் என்னை
சுவையோடு அழைக்கின்றது**

அறுபது வயதிலும் இளமையை சாகவிடாமல் இன்ப நினைவுகளோடு வாழ்வதற்கு சிந்தனையாளனுக்கும் எழுத்தாளனுக்கும் மட்டுமே முடியும்.
அந்த மந்திரத்தை கற்றறிந்தவன். எழுத்தாளன் மட்டுமே "ராஜாவின் ராகங்களில்"சோகங்கள் தழுவிய பல பாடல்கள் இருந்தாலும் இன்றும் இளமை குன்றாமல் இருக்கின்றதே இது தான் இந்த கவிதை தொகுதிக்கு இருக்கின்ற வெற்றி.
சோகம் சுவையானது. ஏனெனில் அவை தான் காலங்கள் கடந்தாலும் எம் மனதை விட்டு அகலாமல் எம்மோடு ஒட்டியிருப்பவை.
இந்த கவிதை தொகுதியில் அவை நன்றாகவே எமக்குத் தெரிகின்றது.
இந்த பிரபஞ்சத்திற்கு நான் மதிப்புரையை எழுதியிருப்பது பலருடைய நெஞ்சங்களில் வியப்பையும், நெற்றியில் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும் ! ஏன் ? விழிகளின் மேல் உள்ள புருவங்கள் தலைக்கு மேலும் தாவும் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் எழுதுகிறேன் ஏன் ?
துரைஸ் என்ற பெயருக்கு முன்னால் "பிரியாலயம்" என்ற பெயர் ஒட்டிக் கொள்வதற்கு முன்னரே இவரையும் இவரின் ஆற்றலையும் கலை ஆர்வத்தையும் எனக்குத் தெரியும் என்பதனால்,
விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். இவருடைய கலை ஆர்வத்தை அறிந்து ஆரம்பத்தில் இருந்தே ஆதரவு கொடுத்து வளர்த்துவிட்டவர்களில் நானும் ஒருவன் என்பதனால்,
அதற்கும் மேலாக எனக்கும் எழுதும் தகுதி இருக்கின்றது என்று நான் நம்பவுதாலும் தான்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்பாகவே யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நான் நடாத்திய கலை நிகழ்ச்சி ஒன்றில் இவரின் பல்குரல் விநோத நிகழ்ச்சியை அரங்கேற்றி கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் பாராட்டைப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தவன் நான்.

கலைத்துறையில் பெயர் சொல்லும்படி உயர்ந்த நிலைக்கு இவர் வருவார் என்று நான் அன்றே உணர்ந்திருந்தேன். அன்றைய நாட்களிலேயே யாழ்ப்பாணம் "ஈழநாடு" பத்திரிகை இவரின் கலை வளர்ச்சியை பாராட்டியதோடு எதிர்காலத்தில் இவருக்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது என எழுதி வாழ்த்தியிருக்கின்றது.

அந்த வாழ்த்துக்களும் எதிர்பார்ப்புகளும் வீண் போகவில்லை. நல்ல எழுத்து ஓவியக் கலைஞனாக, சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளனாக, பண்பட்ட நாடக நடிகனாக கதாசிரியனாக , பாடலாசிரியனாக, ஒளிப்பதிவாளராக இப்படி பல துறைகளில் இவர் உயர்ந்து நிற்கின்றார்.

இவைகளைப் பற்றியெல்லாம் இவர் தனது முன்னுரையிலேயே குறிப்பிட்டிருக்கின்றார்.

அங்கு குறிப்பிடாத விடயமும் ஒன்று இருக்கின்றது. ஏராளமான வாசகர்களை மகிழ்வித்த பத்திரிகை ஆசிரியராகவும் இவர் இருந்திருக்கின்றார்.

ஆம், "சிரித்திரு" என்ற மாத இதழிற்கு ஆசிரியராக இருந்து வெளியிட்டதை பலர் மறந்திருக்கமாட்டார்கள். ஆனாலும் இவரது முன்னுரையில் அது பற்றி குறிப்பிடவே இல்லையே ! ஏன் ?

சிலவேளை தனது முயற்சி குறைமாதக் குழந்தையாக முடிந்துவிட்டதே என்று இவர் கருதி இருக்கலாம்.

ஆனால் முயற்சிக்கின்றவர்கள் வெற்றி பெறுகின்றவர்களை விட முக்கியமானவர்கள் என்பது எனது எண்ணம். முயற்சியே செய்யாவிட்டால் வெற்றி பெறுவது எப்படி?

வெற்றி பெறுபவர்களை மட்டுமே இந்த உலகம் வியந்து பார்க்கின்றது.

அவர்கள் எப்படி வெற்றி பெற்றார்கள் என்று யாரும் கூர்ந்து நோக்குவதில்லை.

அந்த வெற்றிக்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எத்தனை இருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் முயற்சி செய்பவர்கள் எல்லோரும் முக்கியமானவர்கள் தான்.

இன்று வேர்களுக்கு வெந்நீர் ஊற்றிக்கொண்டே விழுதுகளுக்கு விழா எடுப்பவர்கள் மத்தியிலே பத்திரிகை நடாத்துவதில் நுரைசிற்கு ஏற்பட்ட

தோல்வி இவரது சரித்திரத்தில் குறித்துக் கொள் ளப்பட வேண்டிய நிகழ்ச்சியே.
ராஜாவின் இந்த ராகங்களில் இருக்கும் பாடல்கள் பலவற்றில் பெரிய கவிஞர்கள் என்று பெயரெடுத்த வர்களின் கற்பனைக்கு எட்டாத புதிய கருத்துக்கள் பல புதைந்து கிடக்கின்றது.
எழுத்துக்கள் படிப்பவர்களுக்கு எதையாவது உணர்த்த வேண்டும். அல்லது உறுத்தவேண்டும். அந்த வகையில் பிரிந்திருக்கும் காதலர்கள் பலரின் மனதை இவரின் பாடல்கள் உறுத்தும் என்பது எனது அசையாத நம்பிக்கை.
அநேகமான பாடல்களில் இவர் காதலை முன்னி லைப்படுத்தி அதில் சோக நயனங்களை நெளிய விட்டிருக்கின்றார். இருப்பினும் இந்த நாகரீக காலத்தில் உடலின் அங்கங்களை வர்ணித்து அசிங் கமாக எழுதி கவிஞர் என்ற பட்டத்தைப் பெற்ற சினிமாக் கவிஞர்கள் போலல்லாது நாகரீகமாக நாசூக்காக உள்ளப் புணர்ச்சியை வெளிப்படுத்துவ தில் சங்க காலத்துக் கவிஞர்களுக்குப் பின் எங்கள் காலத்திலும் ஒருவர் இருக்கின்றார் என நிரூபித் திருக்கின்றார் இவர்.
இவருடைய இந்த இனிய ராகங்கள் சிறிது கால தாமதமாக வந்தாலும் நாங்கள் வாழ்கின்ற காலம் வரை எங்கள் நெஞ்சினில் தங்கும்.
கற்றதை விட அனுபவமே ஒருவனுக்கு நல்ல ஆசான் என்று எண்ணுபவன் நான்.
படிப்பு மட்டும் சிறந்த எழுத்தாளனை உருவாக்கி விட முடியாது.
படித்தவர்கள் எல்லோரும் சிறந்த சிந்தனையாளர் களாகவா இருக்கின்றார்கள்.
இவருடைய அனுபவங்கள் காதலர்களுக்கு மட்டும் ராகங்களை இசைக்காமல் இனி வரும் காலங்களில் பாமரர்க்கும் அர்த்தமான கீதங்களை இசைக்க வேண்டும் என்பது எனது ஆவல்.
சுகமான இந்த ராகங்கள் என்னை சுவையோடு அழைத்தது போல ராகங்களின் இரண்டாவது தொகுதி எமது மனச் சுமைகளையும் தீர்க்கட்டும்.

உரிமையுடன்

**வண்ணை தெய்வம்**

* * * * * * * * * * * * * * * * *

# இது என்கதையல்ல
# நான் எழுதவந்த கதை

நான் பிறந்த கிளிநொச்சி மண்ணிலே 1975 ஆம் ஆண்டளவில் " நான் படித்துக் கொண் டிருக்கும் காலத்தில் 5 பேர் கொண்ட சிறிய இசைக்குழுவில் அறிவிப்பாளனாக இருந்த நேரத்தில் அக்குழுவின் பாடகர் 'சூரியகாந்தி' ராஜேந்திரனுக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபனத்தில் இருந்து ' அரங்கேற்றம்' நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வாய்ப்பு வந் தது. இச் செய்தியோடு என்னிடம் வந்து வானொலியில் பாட ஒரு பாட்டு சொல்லுங் கள் என்றார் எனக்கொன்றும் பெரிதாக கவி தையெல்லாம் சொல்லத் தெரியாது என்று சொல்லி நாலு வரியில்

அவள் தான் கலை
நானதில் இசை
நாளும் வளம் பெற
பாடுகின்றேன்..... எனச் சொல்லிவிட்டு

சென்றேன். இது பாட்டாகி வானொலியில்

வருமா ? விளையாட்டாக மனசுக்குள் சொல் லிக் கொண்டு சென்றேன். ஒரு வாரம் கழித்து சூரியகாந்தி ராஜேந்திரம் என்னிடம் ஒரு கசற்றைக் கொண்டு வந்து போட்டுக் காட்டினார். வானொலி அறிவிப்பாளரின் குரலில் துரைஸ் ராஜா எழுதிய பாடலை சூரியகாந்தி ராஜேந்திரன் பாடுகின்றார் என்று குறிப்பிட்டு "அவள் தான் கலை " என்று ஆரம்பித்து 4 நிமிடம் 3 பந்தியைக் கொண்ட பாடல் இனிய இசையோடு அவரின் அழகிய குரலில் ஒலித்து ஓய்ந்தது. அவர் நம்ம ஊர் அமுதன் அண்ணாமலை அப்போது. நான் சொல்லிய நாலு வரிகளோடு தொடரான இரு பந்திகளையும் தானே எழுதி முடித்துவிட்டு எனக்கு பெயரையும், புகழையும், தேடித்தந்த அந்த நல்ல நண்பரை நான் மறக்கமுடியாது ? "இரவல் புடவையில் இது நல்ல கொய்ய கமாம்" என்பதைப் போல் அவர் எழுத்து புகழ் எனக்கு. . .

இந்தச் சம்பவமே எனக்கு பாடல் எழுதும் ஒரு புதிய பாதையில் செல்ல வழி அமைத் தது. தொடர்ந்து வட்டூர் பங்கைய மணாளன் என்று அழைக்கப்படும் (லண்டனில் இருக் கும் புலவர்) திரு. ந. சிவநாதன் அவர்களி டமும், காலஞ்சென்ற எனது கல்லூரி அதிபர் திரு. ஏ. கே. ராஜேந்திரம் அவர்களிடமும்(எ னக்கு தமிழ் இலக்கியம் கற்றுத் தந்தவர்) பாடசாலைக் காலங்களில் படித்து ஓரளவு பாட்டெழுதும் நிலையை அடைந்தேன்.

அதன் பின் எமது "ஹரே கிருஷ்ணா"நாடக மன்ற இயக்குநர் திரு. கே. என். நடராஜன் அவர்களின் ஒத்துழைப்பினால் அவரோடு கிளிநொச்சியில் பல கவிமேடைகளைக் கண்

டேன். பின்பு 1979 இறுதியில் பிரான்சில் வாழ்க்கை ஆரம்பித்தது. நிறைந்த மேடு, பள்ளங்களை சந்தித்தேன். காதலில் அன்று ஏற்பட்ட இடைவெளி , தனிமை, பிரிவு , நல்லநட்பு இவையெல்லாம் சேர்ந்து என் நெஞ்சைத் தொட்ட விதத்தை வைத்தே உள்ளே உள்ள இசைப்பாடல்களை எழுதி இருக்கிறேன். ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ் வொரு இசைவடிவம் உண்டு.
(இசைவடிவம் அமைத்துத் தான் வழமையாக அனைத்து பாடல்களையும் எழுதுவேன்) ஏற் கனவே 1985 ஆம் ஆண்டு "நீதியின் சோதனை" என்ற வீடியோப் படத்தை இங்கு தயாரித்தேன். அதில் 5 பாடல்களை எழுதி னேன் ஓகோ என்று என் பாடல்கள் இருப்ப தாக ரசிகர்கள் பாராட்டினார்கள். இனிய இசையோடு சேர்ந்ததினால் தான் என் எழுத் துக்கும் பெருமை வந்தது என்பதை நான் ஒப்புக்கொண்டு என் பட இசையமைப்பாளர் திரு. ஏ. எஸ். ஜெயாபாடலை பாடியவர்கள் அனைவருக்கும் நன்றியுடையவனாக இருக் கிறேன். பின்னர் 'பிரியாலயா இசைக்குழுவை' திரு. ஏ. மண்டலேஸ்வரனின் தலைமையில் திரு. குருநாதன், திரு. நாதன், திரு. சதா, திரு. சோமஸ் ஆகியோருடன் இணைந்து நடாத்தும் வேளையில் "ஓசையில்லா ராகங் கள்" , "புதிய பூக்கள் மலரவேண்டும்", "விடிய விடிய பேசு" போன்ற பாடல்களை திரு. மண்டலேஸ்வரன் அவர்கள் இசைய மைத்துப் பாடினார். என் எழுத்துக்கு ஒரு உயர்வைத் தந்தார். அவருக்கும் நான் நன் றியுடையவனாக இருக்கின்றேன். இந்தக் காலகட்டத்தில் திரு. மண்டலேஸ்வரனும்

தாயகம் சென்றிருந்தமையினால் இசைக்கு ழுவையும் விட்டு ஒதுங்கி இருந்தேன். 2 ஆண்டுகள் ஓடின.

மீண்டும் எனது கலைவாழ்வில் புதிய காற்று இவர்கள் மூலம் வீசியது. பிரான்ஸ் தமிழ் கலைஞர் ஒன்றியத்தை சேர்ந்த திரு. பிலிப் தேவா, திரு. ரி. தயாநிதி, திரு. லோகதாஸ், திரு. இரா. குணபாலன் ஆகியோர் மேடைக ளில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின் றார்கள். அவர்கள் அனைவரும் என்னை அன்போடும் பண்போடும் மதித்து நேசித்து பல நாடகங்களில் நடிக்கவும் பாடல்களை எழுதவும் வாய்ப்பு தந்தார்கள். அந்த வாய்ப் பினால் நான் மிகப் பெரிய வெற்றியை பெற் றுள்ளேன் என்பதை மிகுந்த நன்றியோடு சொல்ல ஆசைப்படுகின்றேன். பாரிஸ் வீடியோ மலர் வெளிவந்த நாடகங்களில் "மாற்றம் தேடும் மனங்களே", "ஆதாரம் ஏதுமில்லை", "மலரில்லாமாலை", "நீந்தத் தெரியாத மீன்களே", "ஆத்மாவின் ராகங் கள்", " உப்பா சீனியா, போன்ற பாடல் களை கேட்டவர்கள் அனைவரும் மனதாரப் பாராட்டினார்கள். இந்தப் பெருமை என் அன் பிற்குரிய திரு. ரி. தயாநிதி, திரு. பிலிப் தேவா, திரு. லோகதாஸ் ஆகியோரையே சாரும் இவர்களுக்கு நான் என்றும் நன்றியு டையவனாக இருக்கிறேன்.

அத்தோடு இணைந்து எனக்கு பெருமை தேடித் தரும் என் இனிய இளையநிலா இசைக்குழுவின் அனைத்து கலைஞர்களுக் கும் குறிப்பாக திரு. குருநாதன், திரு. நாதன், திரு. தில்லைச்சிவம், திரு. பேர்ட்டி ஆகியோரையும் பாடல்களை அரு மையாக பாடிய திரு. கே. ரி. செல்வலிங்கம்,

திரு. எஸ். கஜன் ஆகியோரையும் நான் என்றும் மறக்கமுடியாது.

வெளிவரப் போகும் எனது புதிய படமான "ராஜாவின் ராகங்கள்" எமது திறமைகளை சிலருக்கு எடுத்துரைக்கும் என்பது திண்ணம்.

ஏதோ ஏதோ எல்லாம் எழுதிவிட்டேன். இதை எழுத வித்திட்ட வரை நான் விட்டு விட முடியுமா ? அவர் தான் ' ஈழநாடு ஆசிரியர் ' திரு. எஸ். எஸ். குகநாதன். என் வளர்ச்சியில் மன்னிக்கவும் திறமையுள்ள அனைவரின் வளர்ச்சியிலும் அக்கறையுள்ள ஒரு இனிய மனிதர் அவர். எங்கோ ஒரு ஓரத்தில் தூங்கிக் கொண்டிருந்த என் பாடல்களை அக்கறையோடு உருவாக்கி எனக்கு பெருமை தேடித் தரும் ரஜனி பதிப்பகத்தாருக்கும் என்றென்றும் நன்றியுடையவனாக நான் இருக்கின்றேன். அட்டைப்பட ஓவியத்தை வரைந்த என் மதிப்புக்குரிய நண்பன் திரு. - தி. சாம்சன் அவர்களுக்கும் இதை பதிப்பித்த கலையரசர் அச்சக நிர்வாகத்தினருக்கும், ஆசி வழங்கி அன்போடு எனக்கு உறுதுணை புரியும் என் ஆசான் திரு. சி. காராளபிள்ளை அவர்களுக்கும் என்றும் என் கலைத்துறைக்கு ஒத்தாசை வழங்கும் அண்ணன் திரு. வண்ணை தெய்வத்திற்கும் என் நன்றிகள்.

* * * *   * * * *



# விநாயகனுக்கு என் துதி

நம்பிக்கை கொண்டோரை நலமுடன் வாழவைக்கும்
தும்பிக்கை கொண்டோனே நீ வாழி

உன் ஒளி பெற்றோர்க்கு ஒரு போதும் துன்பமில்லை
உனை யன்றி வேறுதுணை எனக்கு இனி யாருமில்லை

ஊசிக் கண் பார்வையிலே ஆயிரம் சேதி உண்டு
உன் துதிக்கரத்தினிலே உண்மையான கனிவும் உண்டு.
உள்ளதைச் சொல்லி அழும் உண்மை அன்பன் எந்தனுக்கு
உந்தன் அருள் தந்திடய்யா ஒளியான பரம்பொருளே

பானை போல் பெருவயிறும் பழத்திற்கு அழுததுண்டோ
பாவி எந்தன் கண்ணொழியும் காண உனை அழுகின்றதே
ஆனைமுகம் கொண்ட எந்தன் ஆதிபரம் பொருள் துணையே
அன்பு கொண்ட தொண்டனுக்கு தந்திடய்யா காட்சி தனை

சிறு உடல் வாகனமாய் சிரிப்புடன் இருக்கின்றதே
பெரு வளம் கொண்டவனே பெருமைதனைக் காட்டிடய்யா
எழும் எந்தன் அன்புதனை இன்பமுடன் ஏற்றுக்கொண்டு
ஏழை எனைக் காத்திடய்யா கோடி உந்தன் அருள் தந்து.

# பரம் பொருளே நீ வாழி

பரம் பொருளின் பெரும் புகழை பாடுவோம் - தமிழ்
பாட்டாலும் உன் பெயரை வாழ்த்துவோம்
பாலபிஷேகங்கள் நடத்தியே - அருள்
பாலகனே உனை போற்றி ஆடுவோம்.
(பரம்...)

காலத்தால் அழியாது உன் நாமமே - அருள்
கரங்கூப்பி என்னாளும் மன்றாடுவோம்
கலைத்தாயின் தவப்புதல்வன் நீதானென்று
கனிவான திருப்பாட்டும் பாடுவோம்.
(பரம்...)

கனிக்காக மனம் நொந்து நின்றதேன் - திருக்
கண்ணீரும் அதற்காக சுரந்ததேன்
கலைஞானப் பரம் பொருளும் தோன்றவே - திருக்
கலகங்கள் தானாக தீர்ந்தவே...
(பரம்..)

ஔவையோடு அருள் குறும்பு செய்தவன்
அழவைத்தும் வேடிக்கை பார்த்தவன்
சுட்ட பழத்திற்கு பாட்டொன்று தந்ததும் - புது
சுவையான கதையொன்றும் பிறந்ததே.
(பரம்..)

மனங் கலங்கி நாம் பாடும் பாடலை - நீ
மயில் மீது இருந்த வண்ணம் கேட்பதேன்.
மலர்பாதம் என்னாளும் போற்றுவோம் - நாம்
மகிழ்ந்தாட திருக்காட்சி தந்திடு...

# அல்லாவுக்கும் என் வணக்கம்

ஆசியோடு ஆதரிக்கும் அழகுருவே அல்ஹா..
அருள் மழையும் பொழிந்திடுவீர் அல்ஹா..
அன்பரெல்லாம் உம் அடியில் அல்ஹா..நம்
அன்னை தந்தை ஆனவரே அல்ஹா... அல்ஹா...

அருள் நபியும் வரவேண்டுமே - அவர்
அருள் தினமும் பெறவேண்டுமே நாம் - மெய்
அடியவர்கள் எந்நாளுமே - உம்மால்
ஆனந்தமும் பெறவேண்டுமே.

இனம் காக்க வர வேண்டுமே - எம்
இருள் நீங்க வரம் தாருமே
ஈச்சை மர இன்பச்சோலையில் - என்றும்
எளிதாக வாழும் நாதரே

வளர்பிறை உமதில்லமா - அது
வானகத்து தீபமல்வோ - நாம்
வழிபடும் நபி நாதரே - நல்
வழிதனை காட்டும் ஜோதியே

மக்காவை நாம் தொழுதே - மனம்
உக்காமல் வாழ்ந்திடுவோமே - எட்டு
திக்கெங்கும் வாழும் நாதரே - எம்
பக்கமாய் வாழ்வை காட்டல்ஹா

# ஆதியும் அந்தமும் அவர்தான்



ஆதியும் அந்தமும் அவர் தான்

ஆதியும் நீரே அந்தமும் நீரே அந்தோனியாரே
அருளை செய்து அன்பரை காக்கும் தேவனின் தூதே.
ஆதியை அறியா உம் பிள்ளை தானே .
அந்தமும் புரியேன் சிறுவன் நானே

வேடிக்கை கோடி செய்ததும் நீரே - இதை
வாடிக்கையாக கொள்வதும் ஏனோ - என்னை
ஜோடிக்கையாக்க முயன்றதும் நீரே - உமை
பாடிட்டு வாழும் அடிமையும் நானே.

பாதிப்பை கண்டிட்ட பலருக்கு நீர் - வேதம்
ஓதிட்டு நன்மையை செய்திட்டீர் தானே
மாசற்று உம்மை தொழுதிடும் எனக்கும்
மண்ணில் அமைதியை என்றும் தந்திடும் தேவனே.

கலைச் செல்வத்தை தந்த கர்த்தரே தேவா
கனிந்த நல் ஒழுக்கமும் தந்ததும் நீரே
காணிக்கையாகவே என் உயிரையும் தருவேன்.
மாணிக்கமாக நாம் வாழ்ந்திட அருளும்.

# அல்லாவும் யேசுவும்

'ராஜாவின் ராகங்கள்' வீடியோ படத்தில்

அல்லாவும் யேசுவும் ஆனை முகக்கடவுளும்
எல்லாமே ஒன்று தான் எம் முன்னாலே
சிந்திக்கத் தெரிந்தோரே
சிரியுங்கள் என்னாளும்
சந்திக்கு வரவேண்டாம்
நம்மோட சங்கதி
சிரித்திரு.... சிரித்திரு..... சிரித்திரு.....

நட்புக்கு நாங்கள் தான்
நாட்டுக்குள் உவமைகள்
கற்றுக்கொள் தோழனே
கனிவான நண்பனே
நல்லதையே செய்யோணும்
உள்ளதையே சொல்லேணும்
சிரித்திரு..... சிரித்திரு.... சிரித்திரு.....

ஒரு கையின் சத்தத்தில்
ஒலிக்காது ஓசைகள்
பலகையை சேர்த்து நாம்
பலமாக வாழோணும்
பண்புடனே பழகோணும் - உள்
அன்புடனே கூடோணும்
சிரித்திரு..... சிரித்திரு.... சிரித்திரு....

# பாரீஸ் பாரீஸ்தான்

அழகு மிளிரும் நாடுங்க - இங்கே
ஆனந்தமும் காணுங்க - பெரும்
அதிசயங்கள் உண்டுங்க - இதை
அனைவருமே கேளுங்க - பாருங்க..
பரந்த பிரான்சு தானுங்க - இந்த
பாரெல்லாம் எழிலுங்க - இங்கே
படித்த மக்கள் அதிகங்க - அவங்க
பண்பில் கூட முதலுங்க ... பழகுங்க..

ஈவினிங் இன் பாரிசுங்க - உயர்
ஈவில் ரவரும் பாருங்க - பல
இனமும் வாழும் பூமிங்க - இதற்கு
ஈடு எந்த நாடுங்க.. சொல்லுங்க.

உயர்ந்த கோவில் இருக்குங்க.. உள்ளே
உள்ளம் உருகும் புதுமைங்க - அருகே
ஊட்டி வளர்த்த தாயுங்க - புனித
லூர்ட்ஸ் எனும் மாதாங்க ... தாயுங்க.

செங்கதிரோன் சமருங்க - அவன்
சென்றுவிட்டால் குளிருங்க - ஓடும்
செயின் நதியும் சிறப்புங்க - இதை
செவி மடித்து கேளுங்க..பாருங்க

★

## புது உள்ளம்

வெண்ணிலா உறங்கும் வேளையில் - உன்
வேல் விழி உறங்கலாகுமா - சுக
வேதங்கள் கூறும் இரவிலே - உன்
வேண்டுதல் என்ன சொல்லம்மா
(வெண்ணிலா)

வேதங்கள் சொல்லும் மன்னவா - என்
வேண்டுதல் சொல்ல முடியுமா - வேல்
விழிகளை கேட்டுக் கொள்ளுங்கள் - பின்
விருந்தினை அள்ளித் தாருங்கள்.
(வெண்ணிலா)

விழிகளும் மௌனம் கொள்ளுதே - புது
விருந்துண்ண தயக்கமாகுதே - கலை
வேண்டாத ஒன்றல்லவே - அது
விடிந்தாலும் தீராத இன்பமே
(வெண்ணிலா)

விழி நான்கும் புதிதானதால் - நீ
விருந்துண்ண தடை வந்ததே - இனி
வெட்கங்கள் திரையானது - சுக
போகத்தை நிலையாக்கிடு.

## இரண்டுகோணம் அன்று
## எதுவும் இல்லை இன்று

வாழ்க்கைப் பாதையில் பல கோணம் - அதில்
வாழ்ந்திட வந்தது இரு கோணம் - நல்
வசந்தத்தை தந்தது ஒரு கோணம் - அந்த
வாழ்வையும் பிரித்தது மறுகோணம்.

தந்தை வழியில் ஒரு கோணம் - நல்
தாரமென்று நின்றது - பின்
தன்னலமென்னும் புயலாலே - அது
தன்னைத் தானே அழித்தது.

தனயன் விரும்பும் ஒரு கோணம் - கலைச்
சாலை வழியில் கனிந்தது
கம்பனின் கவிக்கும் உயிர் ஊட்டி - அக்
கன்னி மனமும் மலர்ந்தது.

திருமணம் என்னும் புதுக்கோணம்
திரிந்து திசைக்கு வந்தது - அந்த
திசையை திருப்ப மறுகோணம் - அங்கு
தீயாய் எரிந்து நின்றது.

இரண்டு கோணம் வருமென்று - அந்த
இளைஞன் மனமும் எண்ணவில்லை - இனி
என்ன நடக்கும் என்பதை கேட்க - அங்கு
இறைவனும் கூட வரவில்லை.

## ஓடும் ரயிலில் ஓசையில்லா ராகங்கள்

காதல் கண்டேன் காதல் கண்டேன்
ஓடும் ரயிலில் காதல் கண்டேன்
ஊடல் செய்யும் முகமும் கண்டேன் - எதிரே
ஊமையான மலரும் கண்டேன் - இதை
வாடும் உள்ளம் நானும் கண்டேன்.
வாலிபன் என்றே மௌனம் கொண்டேன்.

கண்கள் பேசும் ஜாலம் கண்டேன்
கனி இதழ் மாறும் காட்சி கண்டேன் - அவன்
கனவு உலகை அடையக் கண்டேன - அக்
காட்சிகள் தனிலும் மோகம் கண்டேன் - இது
காமன் லீலை நாடகம் என்றேன் - பின்
கம்பனை நினைந்து வருந்திக் கொண்டேன்.

வேகம் உதித்த வழியும் கண்டேன் - அது
வேல் விழி செய்த தவறே என்றேன் - இதை
வினவினால் என்ன ? என எண்ணம் கொண்டேன்.
விலாவினை எண்ணி நிறுத்திக் கொண்டேன்.
வேதனை ஓசை பெருமூச்சாய்க் கண்டு
வேறிடத்தே ரயிலால் இறங்கிக் கொண்டேன்.

## எனக்கும் இடம் உண்டு

தாங்குமா! என் நெஞ்சம் தாங்குமா!
உன்னால் வந்த துயரம் என்றும் நீங்குமா?
எதையெல்லாம் நினைத்தது ஏதேதோ நடந்தது
கனவெல்லாம் கலைந்தது கண்ணீரும் வந்தது - நம்
காலத்தின் கோலத்தால் பழியார் மீது சொல்வது.

மேகத்தின் தாகத்தை கடல் நீரும் தீர்க்குமே
மேலெழும் பட்டத்தை சிறுநூலும் காக்குமே
ஆண்மகன் பாசத்தை பெண்மானும் புரியுமா? என்
ஆத்மாவின் ராகத்தை ஆண்டவன் அறியுமா?

வீணையின் கீதத்தை வளைகரம் அறியுமா?
வேண்டிடும் தேவையை ஊமை தான் கூறுமா?
மீனின் வாழ்க்கையை மானிடன் தாங்குமா?
மேதையின் வார்த்தையை மூடனும் ஏற்குமா?

பணியாத சீதையை இனியார் தான் தேவையோ?
கனியாத வாழ்க்கை தான் உனக்கேற்ற பாதையோ? இன்னும்
தனியாக நான் வாழ புரியாத கோழையோ?
தரணியில் துணையற்று தவித்திடும் பேடியோ?

## 'நிஜம் நிழலாகப் போகுதோ'

நீதியின் சோதனை வீடியோப் படத்தில்

கண்ணாடி வளையல் கைமாறிப் போச்சு -
காத்தாலக் கனவு நிஜமாகி போச்சு .
என்னோடை துயரம் பல படியாச்சு - என்
நெஞ்சுள்ளே வைச்ச வெடிமருந்தாச்சு.

மின்னலின் துணையில் பெண்துணை பார்த்தேன்.
முகிலின் இடையே நிலவை கண்டேன்.
வானவில் வடிவம் நிலைத்திடும் என்று
வருங்கால கதையை தப்பாக குறிச்சேன்.

புயலென்ற காற்றை புன்னகையில் பார்த்தேன்.
தென்றலென எண்ணி தீபந்தனை வைச்சேன்.
தீராத ஆசையில் தினம் அதை காத்தும் - எண்ணெய்
தீர்ந்தாகி அங்கே கூடு பத்தலாமோ

வாலறுந்த பட்டம் வானகத்தில் விட்டேன்.
நூலறுந்தும் போனால் நான் என்ன செய்வேன்.
காகிதமும் என்றகதை புரியாமல் - அங்கே
காற்றோடு மழையும் பொழிந்தது ஏனோ?

## நீதிக்கு வந்த சோதனை

நீதிக்கு வந்த சோதனை - அது
நிலையாகி கண்டேன் வேதனை
சாமிக்கு என்னிடம் வஞ்சனை
சாமி சரியென தந்தது தீர்ப்பினை

சட்டங்கள் என்றும் இருட்டறை - இதை
சரியாய் சொன்னார் அறிஞரும் - இது
சாக்கடை என்பதை கண்டுமே - நான்
சத்தியம் காத்திட முடியுமா ?

உருவங்கள் மாறிய பாவத்தை - என்
உள்ளம் ஒன்றே உளவறியும்
ஒருகரம் தனையே நான் தட்டி - நல்
ஓசையை கேட்டிட முடியுமோ

நெஞ்சினில் எய்தான் அம்பினால் - தன்
வஞ்சத்தை தீர்த்தான் பொய்யினால் - எனை
எய்வதன் தனையே நான் தேடி
இத்தனை காலம் பொறுத்திருந்தேன்.

## தங்கக் குடம்போலே...

தங்கக்குடம் போலே எந்தன் நெஞ்சின் மீது
தளிர் விடும் பூங்கொடியே
தாயும் நானே தந்தையும் நானே
தவிப்பின்றி ஏன் கொடியே.

தவளும் பருவத்தில் சிரிக்க வைத்தாய் - நான்
தாலாட்டு பாட வரம் கொடுத்தாய் - என்
தனிமையை தவிர்த்து வாழ வைத்த
தமிழின் வடிவே நீ வளர்க.

தாலாட்டு பாடும் இம்மொழியை - உன்
தாய்மொழி என்று வணங்கிடணும் - நீ
தமிழ் மக்கள் போற்றும் தலைவரைப் போல்
தரணியில் வாழ்ந்தும் காட்டிடணும்.

தம்பிகள் போற்றும் அண்ணாவின் வழியை
தவமிருந்தேனும் அடைந்திடனும் - நல்
தாய்குலம் போற்றும் புரட்சியார் வழியில்
தைரியமாகவே தொடர்ந்திடணும்.

'நீதியின் சோதனை 'வீடியோப் படத்தில்

தேவன் தந்த சொந்தங்கள்
பேதம் என்ன சொல்லுங்கள்
ஆடிப்பாடும் உள்ளங்கள்
ஆனந்தமாய் வாழுங்கள்.

நமக்கு நாமே தான் சொந்தம்
நாட்டில் இல்லை ஒரு பந்தம்
நல்லதை என்றும் செய்தாலே -
உண்மை உறவுகள் உருவாகும்.

பாலில் இருந்து தான் வெண்ணை
வந்தது என்பது முழு உண்மை
வெண்ணெய் என்று பெயர் பெற்றால்
பாலின்றி வந்தது எனலாமோ.

## வான்மீது செல்லும் வானம்பாடி

'ராஜாவின் ராகங்கள்' வீடியோப் படத்தில்

வான் மீது பாடும் வானம்பாடி
வந்தாரா எந்தன் மன்னன்
இந்தப் பக்கம். . ஓ. . ஓ. . .

மன்னன் முகம் தேடித் தேடி
மங்கை பாடும் பாட்டு கோடி
அக்கா. . . அக்கா. குயிலக்கா. .

சந்திரன் போல இருப்பாரா அக்கா
சூரியன் போல இருப்பாரா அக்கா
வந்தாரெண்ணா.. ஒன்னு தந்தாரெண்ணா
எந்தங்ன மன நோய்கள் தீர்ந்து
இந்த ஜென்மம் தென்றல் வீசும்.

சின்னப் பொண்ணு நான் தானே அக்கா
செல்லப் பொண்ணு நீ தானே அக்கா
வந்தாரெண்ணா ஒன்று தந்தாரெண்ணா
வாழ்க்கை அலை வசந்தமாகி
வந்து சேரும் இன்பம் கோடி

## அழகான பூந்தோட்டம்

அழகான பூந்தோட்டந் தான் - இங்கு
அன்புக்கு பஞ்சமில்லை
ஆடுங்கள் பாடுங்கள்
அறிவுடனே பழகுங்கள்
அனைவருமே ஓர் இனம் தான்.

ஆயிரம் நிறம் வரும்
ஆயிரம் மணம் தரும்
ஆனாலும் எல்லாமே
அழகான பூவினம் தான்.

எங்கே நாம் பிறந்தாலும்
எங்கே நாம் வாழ்ந்தாலும்
எல்லோரும் ஒரு தாயின்
பிள்ளைகள் போல்
வாழ்வதில் வசந்தமுண்டு -இதை
அறிவாய் நீ மனிதா
ஆண்டவன் படைப்பினிலே
ஜாதியில்லை பேதமில்லை
எல்லோரும் ஓரினம் தான்.

## அத்தானின் ஆசை

அத்தானின் ஆசைகள் என்னாளும் தீராது - உன்
ஆசை என்ன என்ன சொல்லம்மா - அதை
என்னாளும் தீர்த்து வைப்பேன் நானம்மா
என் போல உள்ளம் உண்டோ சொல்லம்மா
துணையென்னும் மானம்மா - உனை
தொட்டாலும் என்னம்மா
துடிக்காதே எந்தன் கண்ணம்மா - உன்
துன்பங்கள் போக்கும் மன்னன் நானம்மா.

விழியாலே பேசாதே வேண்டாண்ணு சொல்லாதே
வீரமும் பேசி என்னை ஜெயிக்காதே
வேண்டாத வம்புக்கென்னை இழுக்காதே - பின்
வேடிக்கை காட்டி என்னை மயக்காதே.

வெள்ளாடு நீயம்மா சபதமும் செய்யாதே
வெறும் பேச்சுப் பயலாய் என்னை எண்ணாதே
வாழ்ந்தாலும் வாழ்க்கை என்றும் மாறாதே
வருங்காலம் என்றும் எங்கும் மாறாதே.

## வண்ண மலர் உண்டு வாழ்வு மலர்

பாசமலர் பூத்து நின்ன என் வீட்டு தோட்டத்திலே
வாசமலர் மட்டும் எங்கோ காணோமே
வண்ணமலர் கோடியாக காட்சி தந்தும் - எந்தன்
வாழ்வு மலர் மட்டும் அதில் காணோமே.

சூரியனின் வரவினிலே தாமரையும் கண்டேனே
மதியற்ற மங்கையையும் காணோமே
மங்கை எல்லாமே மலரெண்ணா தப்பாகும் - மதி
மயங்கி நின்ற என் மனது முன்னாலே

தினமும் திருநாள் மனதுக்கு கொண்டாட்டம் - உனை
தேடுகின்ற என் மனதோ திண்டாட்டம்
சேதி ஒண்ணு சொல்லி என்னை விட்டாயே - பின்
செல்லாத பணமாக மதிச்சாயே

பாசம் என்னாளும் பயனற்று போகாது - என்
பலனுள்ள நல் மனது முன்னாலே - நம்
பருவமே இதற்கெல்லாம் வழியாச்சு - என்
பரிதாபமும் உனக்கென்றும் சிரிப்பாச்சு

## என் மனமோ மலரினம்

என் மனமோ மலரினம்
உன் மனமோ முள்ளினம் - இவை
இரண்டும் செடியில் உள்ளது - அது
இணைந்தே புது அழகும் வந்தது.

வைரம் பாய்ந்த என் மனம் . ஒரு
வழியால் வந்ததும் இத்தினம
கல்லால் ஆன என் மனம் - இன்னும்
கனியாதிருத்தல் நன்மையோ

காலம் எல்லாம் என் மனம்
கன்னி உன்னால் அழிவதோ - உன்
கர்வம் இன்றும் நிலைப்பதால் - நல்
காதல் காவியம் போலியோ.

கன்னிகள் உலகில் பலர் உண்டு - என்
காமத்தை தீர்க்கவும் வழி உண்டு.
அதற்கென உனை நாடவில்லை - நல்
ஆத்மா என்றே நாடுகிறேன்.

## உண்மை அன்பு என்றும் உதிராது

கல்லுப் பாறை கரையாதது - புயல்
காற்றில் தீயும் அணையாது . என்
உள்ளம் என்றும் மாறாதது - இதை
உறவாள் நீயும் அறிந்திடணும்.

முள்ளில் ஆடை போட்டாலே - நீ
முடிவை எண்ணி கலங்கிடணும் - என்
அல்லிமலர் மேல் காவல் வைத்த - பெண்மை
ஆடை என்றும் பௌத்திரமே.

கள்ளிப் பாலில் கரும்பில்லை - இதை
சொல்லித்தானா புரிந்திடணும் - சிறு
பிள்ளைப் பருவம் கொண்டவளே - இனி
பெரியவளாக நடந்திடணும்.

வள்ளி என்றும் எனக்கில்லை - மலர்
மல்லி இனத்தை சேர்ந்தவளே - வாழ்வுப்
பள்ளி தனை நீ சிறப்பித்து - மதுரை
செவ்வியாய் நீயும் வாழ்ந்திடுவாய்.

## ஆறுதல் யாரோ?

ரி. தயாநிதியின் 'வினாக்கோலம்' வீடியோ நாடகத்தில்

ஆதாரம் ஏதுமில்லை
அனுபவிக்க யோகம் இல்லை
சேதாரம் ஆகும் அன்பை
சேர்த்து வைக்க யாரும் இல்லை
(ஆதாரம்)

கூடாரம் போட்டு நெஞ்சில்
குடிவைத்தேன் தெய்வமென
காதோரம் பதில் கொடுத்து
கலைத்துவிட்டார் கற்பனையை

தெருவோரம் என் வாழ்க்கை
திசை மாறி வந்தாச்சு - என
விழியோரம் வரும் துளிகள்
வினாக்கோலம் போட்டிடுதே
(ஆதாரம்)

தீயோரம் நான் வாழ்ந்தால்
தேய்பிறைக்கு உறவாவேன் - இனி
வாதாட வழியில்லை - அந்த
வளர்பிறைக்கும் உறவில்லை.
(ஆதாரம்)

## 'போலியும் பாலியும்'

மழைநாளில் பனித்துளிகள் - எப்
பருவத்திற்கும் சுகம் தருமா - எதிலும்
சளைக்கா உள்ளத்திற்கே - அது
விலை போகாப் பொருளாகுமே.

வான் திங்கள் ஒளிதனுக்கு
வண்ண மின் என்ன ஈடாகுமா - அது
வரும் நேரம் உறங்கிட்டால் - இந்த
வையகம் துயில் கொள்ளுமே

பாய் மரப் படகுகள்
பாதிவரை தான் செல்லுமே - அஃது
காகிதத்தின் கப்பலும் - முழுக்
காலம் வரை நீந்துமா

வேகவைக்கும் விறகுதனும் - பயன்
வேண்டும் வரை எரிந்திடுமே - அது
பாதியிலே அணைந்திட்டால் - பண்டம்
பயனற்று போய் விடுமே.

## வாழ்க்கை ஜோடி

விடிய விடிய பேசு - என்
விழிகளோடு பேசு
கரும்பு தின்ன கூலி எதற்கு
காமனுக்கும் வேலி எதற்கு

விடிய விடிய பேசினாலும் - என்
விழிகள் தூங்காது - சுகம்
முடிய முடிய வழங்கினாலும் - என்
முடிவு மாறாது.

இன்றோடு முடியும் இரவன்றோ
ஏழேழு ஜென்மம் தொடரும் உறவன்றோ
தாலாட்டு பாடவா தாயாய் மாறவா
தங்கமே என் மன்னனே

மாலைகள் தோளிலே - இன்னும்
மௌனம் ஏன் கண்ணிலே
மார்பிலே தூங்கிடு - என்
நெஞ்சத்தின் தேவியே.

## ஆதாரம் ஏதுமில்லை

ஆதாரம் ஏதும் இல்லை
அனுபவிக்க யோகம் இல்லை - இனி
சேதாரம் ஆகும் அன்பை
சேர்த்து வைக்க யாருமில்லை.

கூடாரம் போட்டு நெஞ்சில்
குடிவைத்தேன் அத்தானை - இன்று
காதோரம் பதில் கொடுத்து
கலைத்து விட்டார் கற்பனையை

தெருவோரம் என் வாழ்க்கை
திசை மாறி வந்தாச்சா - என
விழியோரம் வரும் துளிகள்
வினாக்கோலம் போட்டிடுதே.

தீயோரம் இனி வாழ்ந்தால்
தேய் பிறைக்கு உறவாவேன் - இனி
தோதாரும் எனக்கில்லை - என
தோல்வியை நான் ஏற்கின்றேன்.

## 'செயின் நதியும் காதல் ஜோடியும்'

ஆண்:
செயின் நதியோரம் சுகம் காணுவோம்
செந்தமிழ் நாட்டு புகழ் பாடுவோம்
செவ்வான மதி போலவே - இச்
செல்வ நாட்டின் எழில் காணுவோம்.

பெண் :
செங்கதிரோனின் ஒளி மீதிலே
செந்தூரப் பூவாகினேன் - உன்
செழிப்பான முகம் மீதிலே - எழில்
செஞ்சுடராக ஒளி வீசுவேர்.

ஆண் :
செம்மலராக புவி மீது மலர்ந்தவளே
செவ்விதழோரம் சுவை பல தருவேன் - சுக
தேனாற்றில் நாம் நீந்தியே
தெவிட்டாத இன்பங்கள் நாம் காண்போம்.

பெண் :
சொல்லாத சொந்தங்களை கண்டிடவே - இச்
சொர்க்கமான புது வாழ்வும் பிறந்ததுவே
தொட்டில் ஒன்றும் நம் வீட்டில் வந்திடவே - எனை
சொந்தமாக்கி மலர் மாலையொன்றும் தந்துவிடு.

# சின்னமணிக் குயிலே வா

'ராஜாவின் ராகங்கள்'வீடியோ படத்தில்

சின்னமணிக் குயிலே
சின்னமணிக் குயிலே
எந்தன் மனக்குறையை
தீர்த்து வைக்கும் மயிலே வா. . . வா. . .

என்னோடு வா. . . வா. .
ஒன்றாக கூடி
இன்பங்கள் காண்போம் கோடி

அத்தை மகள் எனக்கு
ஆயிரம் ஆசை - இன்று
முத்தமழை பொழிந்து
வித்தைகள் படைப்பேன்
சத்தமின்றி தருவாயா
சக்கரைப் பொங்கல் - இன்று
நித்தம் அதை சுவைப்போம்
நிலவே மலரே வா. . . வா. .
என்னோடு வா. . . வா. . .
ஒன்றாக கூடி
இன்பங்கள் காண்போம் கோடி.

தித்திப்பாக இருக்கு
சின்னப் பயல் பாட்டு
அந்தக் காலம் எனக்கு
உள்ளமதில் வருது
சில்வுப் பிளேபாட்டை ஆ. . . ஆ. . .
சின்சியராய் பாடு.
சூப்பர் கிற் என்று
சுற்றங்கள் சொல்லுது வா. . . வா. .

# ஒன்றான ஜோடிகளின் வர்ணனையில்

பெண்:
செயின் நதியின் ஓரத்திலே
சேர்ந்து லாவும் வேளையிலே
பாய் விரித்து பாடம் சொல்லவா
பால் நிலவை மூடிக் கொள்ளவா.

ஆண்:
காமனவன் அம்புகள்
கன்னிமலர் இதழிலே
கதை படிக்கும் வேளையில் - சுக
காச்சலிலே வியர்வை வந்ததோ - உனை
ஆட்சி செய்து இளமை வென்றதோ

பெண் :
வெற்றி கொண்ட மன்னனே
வீரம் கொண்ட கண்ணனே
மலர்கள் எல்லாம் வாழ்த்துகின்றதே - நம்
தோள்களுக்கு மாலையானதே.

ஆண் :
கண்டு கொண்டேன் தேவியே
இன்பம் தரும் தென்றலே
மகிழ்வு கொண்டேன் உன்னாலே
மங்கை நீ சொந்தமானதால்

## "நம்நாட்டு தோழருக்கு"

இலங்கை நாட்டு வாலிபரே உமக்குத் தெரியுமா ?
இயற்கை கொஞ்சும் பரிசு நாடு இருக்குப் புரியுமா ?
உழைப்புக் தேடி வாலிபர்கள் வந்தார்கள் - தம்
உருக்கமான் கதையைச் சொன்னார்கள்.

நிக்லஸ் என்னும் மடம் ஒன்று உண்டு.
நீண்டவரவேற்பும் அன்றொரு நாள் உண்டு.
நாலே முக்காலுக்கு கியூவரியில் நின்று
உள்ளே விடுவானாம் இடி அமீனும் அங்கு
மற்றோர் எல்லாம் பல்லைக் காட்டுவார்..
நம்ம பொடியள் செந்தமிழ் பேசுவார்.

(இலங்கை நாட்டு)

பூவல் பெட்டியினுள் தட்டொன்று எடுத்து
பூஞ்சணமும் பிடித்த கரண்டியையும் பிடித்து
பழைய பாணோடு கஞ்சியையும் சேர்த்து
பசியை தீர்த்தாலே நன்றென்று உண்போம்.
பொடியன் நிலை உமக்குத் தெரியுமா
புரியச் சொன்னால் பொழுது புலருமா?

(இலங்கை நாட்டு)

மேல்மாடி அறையினிலே ஸ்பிறிங் கட்டில் உண்டு
மெதுவாய் வந்திடுவார் மன்மசல்கள் ஊர்ந்து
மெத்தை விரிப்பினிலே லேசாகப் பூர்ந்து
மெல்லத் தந்திடுவார் இஃபங்கள் கோடி,.
ஐயோ அது மூட்டை அல்லவா !
அழகா எடுத்துச் சொல்லவா

(இலங்கை ..)

## 'வாழ்க்கை ஓடத்தில் ஓடும் உயிர்'

வாழ்க்கை என்னும் ஓடத்திலே - நாம்
வாழ்ந்து வந்தோம் பாரிஸினிலே

ஆசை காட்டி அழகை காட்டி
அழைத்து வந்தாராம் அநியாயமாக
வட்டிப் பணத்துக்கோ குட்டி வளருதாம்
வருங்காலமோ பார்த்துச் சிரிக்குதாம்
வண்ணக் கதையை சொல்லுகிறோம்.
(வாழ்க்கை)

துடுப்பு இல்லாமல் படகைப் போல
துடித்து வாழ்ந்தோம் பரிஸினிலே - நாம்
என்ன காலமோ என்ன கலக்கமோ
எம்மைப் பெற்றவர் செய்த பாவமோ
ஏன் பிறந்தோம் அந்த மண்ணிலே
(வாழ்க்கை..)

பாரிஸ் நாட்டில் உத்தியோகம் என்றால்
கிடைப்பது மிகவும் கடினந்தானே
சம்பளமோ சில ஆயிரம்
எம் ஆட்களோ பல்லாயிரம்
ஏன் வந்தோம் இந்த நாட்டுக்கு
(வாழ்க்கை..)



# நாடு நல்ல நாடு தம்பி

நாடு நல்ல நாடு தம்பி - இங்கே
நம்மகலை பாரு தம்பி - அது
நல்லதென பட்டாத்தம்பி
நல்லாசியையும் தாருங்க தம்பி

தூக்கமின்றி துயரங் கண்டு
ஆக்கம்தனை தந்தோமே - எமை
தாக்கும் நோக்கை தவிர்த்து தம்பி
காக்கும் கரங்கள் தாருங்க தம்பி.

உங்கள் அன்பும் எங்கள் சொத்து
உயர்ந்த கலைகள் அழியாச் சொத்து
உண்மையுடன் போற்றும் கலையை
உயர்வாக்கி போற்றுங்க தம்பி.

பூனைக்குள்ளே புனுகுமுண்டு - நல்ல
பூவும் சேற்றில் பூப்பதுண்டு - தம்பி
ஆழ்கடலில் சங்குமுண்டு - அங்கே
முத்து உள்ள சிப்பியுமுண்டு.

கடல் கடந்து வந்து இங்கே
காசு பணம் சேர்க்கவில்லை - தம்பி
கலைமகளின் கைக்குழந்தை ஆகிய
கலை தன்னை சேர்த்துக்கொண்டோம்.

## பாரிஸ்பாரிஸ்தான்

பாரிஸ் தான் சந்தோஷ உலகம் - இங்கே
இருக்குது ஆயிரம் உல்லாச இதயம்
குடிக்கலாம் கூத்தடிக்கலாம்
கும்மாளந்தான் பெண்ணோடுமே
கொண்டாட்டம் தான் என்னாளுமே.

நித்தம் நித்தம் புதுமலர் - எம்
நெஞ்சில் மோதும் - நாம்
சத்தம் இன்றி சூடிக்கொள்வோம் நாளும்
சரி தான் சந்தோஷம் தான்
சங்கடம் எதற்கு
சந்தோஷம் இருக்கு
அடடா.. அடடா... ஆ... ஆ...

இரவு தான் எனக்கு சந்தோச உலகம் - அங்கே
இருக்குது ஆயிரம் உல்லாச இதயம்
குடிக்கலாம் கூத்தடிக்கலாம
கும்மாளம் தான் பெண்ணோடுமே
கொண்டாட்டம் தான் என்னாளுமே.

சுத்தம் இல்லை சத்தம் உண்டு - கண்ணில்
மீனை வைத்த பாவைகள் ஆயிரம் - அங்கு
மானே என்று சொன்னாலும்
தேனே என்று சொன்னாலும்
தானே வந்து கட்டிக்கொள்ளும்
பூவைகள் அன்புத் தொல்லைகள்

இரவென்று பகலென்று எதுவும் இல்லை - அங்கு
இளமையும் முதுமையும் மோதும் தொல்லை
இடையிலே புகை மண்டலம்
இதமான மதுரசம் - அங்கு
ஆனந்தம் அதிகம் - ஆனாலும்
அங்கே இருப்பது வெட்கம்.
வேண்டாம் டிஸ்கோ
வேண்டாம் டிஸ்கோ.

## போதுமா?

ஆண்:
வாழ்க்கைகள் கோடி அதன் பாதையும் கோடி
வாழ்ந்திடும் ஜோடி அல்லயாகிடும் போது
துணையாகிடும் உள்ளம் எங்கே நீ சொல் - கருங்
கல்லான கடவுள் தான் உண்டோ - இங்கு
வானமே நீ சொல் மழையாய் - இன்று
பூமியே நீ சொல் புயலாய் இன்று

பெண் :
மணக்கோலம் வேண்டும் துணைக்காக என்னும்
மாறாத மனதை கொண்ட கண்ணா - என்றும்
உனக்கேற்ற உறவும் உண்டு இங்கே - நம்
உள்ளன்பும் உறங்காதென்றும் நீ கொள் மன்னா
ஏழைக்கும் வாழ்க்கை உண்டு எனச் சொல்
என்றும் வழக்குகள் இல்லை நமக்குள்
எனச் சொல்லு கண்ணே

இருவரும்:
ஒன்றான உள்ளம் ஒளி விடும் தீபம்
ஒருபோதும் அணைவதில்லை என்போம் - நாமே
பூமியில் அணைந்தாலென்ன என்போம் - என்றும்
வானகம் நமக்கே உண்டு - இன்பம்
காண்போம் அங்கே என்போமே

## மண்ணுக்கு வரும்போது

மண்ணுக்கு வரும் போது இன்பம் இன்பம்
மண்ணுக்குள் போகும் போது துன்பம் துன்பம்
மானிடா..!. மானிடா.!.. ஏனடா?. ஏனடா..?
இயற்கையை இறைவன் இப்படி வைச்சான்.
இருட்டிலே இன்பத்தை கூட்டிக் கழித்தான்.

இருக்கும்போது ஆயிரம் நண்பர்
இறக்கும்போது நால்வரே சொந்தம்
நம்முடன் வாழ்ந்தவன்
நடுக்காட்டிலே வேகிறான்
நானென்ன செய்வது
நீயென்ன செய்வது
நடப்பதை தடுத்திட
நம்மால் முடியுமா ?

முயன்று பார்த்தாலும் முட்டாளாவான்
முடிவை செய்தவன் தீர்ப்பின் முன்னே
தீர்த்தது தீர்த்ததே - அதை
திருத்தி அமைத்தால் - இந்த
திண்ணை போதுமா? எல்லோரும் வாழ.

## அன்னை வெறுத்தால்

வித்திட்டு வளர்த்த அன்னையும் - எனை
வேண்டாம் நீ என்றிட்ட போதிலே
சத்துாட்டி என் உடலை காத்து நான் - இன்னும்
பத்தாண்டு காலம் உயிர் வாழ வேண்டுமோ

சத்தாக நான்அருந்தும் மதுவிலே - சுக
சந்தோஷம் என்னாளும் மலருதே
சலனங்கள் நின்றாடும் என் வாழ்விற்கு - மாதுச்
சந்தோஷம் இன்னொன்றும் வேண்டுமோ

மழை மேகத்தில் இருள் சூழ - என்
விழி கண்டதே இன்னாளிலே - என
அலைமோதிடும் என் ஆத்மாவிற்கு - இனி
அணைபோட்டிட யார் தோன்றுவர்.

பம்பரமாய் நான் பட்ட பாடுகள்
பத்தாதோ மண்ணுலக வாழ்க்கையில் - இன்னும்
மத்தாப்பாய் நான் வாழ்தல் போலி - தனியே
செத்தால் தான் தீருமடா சோலி.

## ஆத்மாவின் ராகங்கள்

ஆத்மாவின் ராகங்கள்
அலைமோதும் நேரத்தில்
காரிருளில் அனல் வந்தது - வரும்
கண்ணீரும் நெய்யானது.

மூன்று மலர் பூத்தமரம்
முகாரி பாடுதடா
கல்யாணி பாடும் காலம்
கனவினிலும் இல்லையடா

வீட்டுக்கென ஈன்றவனை
நாட்டுக்கென அனுப்பிவைத்து
நல்லதொரு சான்றையிவன்
நம்மிடையே பெற்றுவிட்டான்.

ஆறுடகல் தாண்டி அங்கே
அக்கையவள் காட்டுமன்பு
மாரியிலே குடையானது - அன்பு
மலர் தூவ உயர்வானது.

சேற்றினிலே நாற்றொன்று - தான்
செந்தமிழின் உற்றென்று
தம்பி வழி சரி என்றது.
தமிழ் மண்ணே துணை என்றது.

# அவளுக்கு ஒருகோடி பாடல்

ஒரு கோடி பாடல் நான் பாடவேண்டும்.
உன் எண்ணம ஒன்றே உயிராக வேண்டும்.
இசையோடு ராகம் இணைந்தாகும் இன்பம்
உன்னோடு நான் கண்டாடவேண்டும்.

மலர்களின் மென்மை மனதினை இழுக்கும்- என்
மனையவள் மனமும் என்னுள்ளே கலக்கும்
மாலைகள் இரண்டும் தோள்களில் சிரிக்கும் - அந்த
மங்கள காட்சி நெருங்கிடவேண்டும்.

செவ்விதழ் மறைக்கும் மாதுளை முத்து - நீ
சிரித்திடும் போது வெளிவரவேண்டும் - அதன்
சுவைதனை அள்ளி பருகிட நானே . உன்
சுயம் வர நாளை கண்டிடவேண்டும்.

வேல் விழி ஓரம் வினாக்களைக் கண்டேன் - சுக
விருந்தினை பெறவே அக்கலை என்றேன்- புது
வேதத்தை பள்ளி சொல்லிடும் வேளை . உடற்
பாகத்தை அள்ளி படிப்போம் பாடம்.

## மேல்நாடும் நம்நாட்டு ஜோடியும்

ஆண் :
மேல் நாட்டு மண் மீதிலே - நம்
நாட்டு மணம் வீசுதே
மேனகையின் எழில் காணவே - இம்
மேடையெங்கும் தேடுகின்றேனே.

பெண் :
தேடுகின்ற தேவ மன்னவா - நான்
தெய்வ ஆலயத்தில் பாடுகின்றேனே
செந்தமிழ் நாட்டு மலராகவே - என்
தேவனுடன் வாழ்ந்திடுவேனே.

ஆண்:
வாழ்த்துக் கூறி வாழவைப்பேனே
வளர்மதியே ரதிதேவியே - ஈவில்
ரவர் தருகின்ற எழில் காட்சியை
ரசித்தோடி என்னருகே வா.

பெண் :
தரையெங்கும் ஒளிக்கோலங்கள்
தமிழாக மிளிர்கின்றதே - என்
தமிழ் மகனே உனை தேடியே - செயின்
நதியோரம் விருந்து வைப்பேனே.

## பூவில் வண்டு மோதும் நேரம்

பூவில் வண்டு மோத - அதை
பூவை கண்டு சிந்து பாடும்.
பூவினம் வண்டுடன் ஒன்றாகி - பின்
வண்டுகள் மது உண்டன பின்னாடி - பூத்
தண்டிலே தள்ளாடி உல்லாச நடைபோடும்.

சேற்றில் நின்ற நாற்று - வண்டு
தேற்றிவிட்ட மூச்சை கொன்று - சுக
சாற்றில் தாகம் வென்று - உடல்
சோற்றுக்கான பதம் கண்டு
சோலை வயல் நெல்லாகும்.

ஆற்றில் நின்ற மீனும் கண்டு ஆடைதேடி ஓடும் - இப்
பாட்டைக் கேட்டபோதே பருவம் கண்டதாக
ஊற்றில் வந்த இன்பம் இதுவென
ஈற்றில் வெற்றி காணும்.

காற்றில் வந்த கானம் காமன் எய்த பாணம் - அவள்
ஏற்றி வைத்த தீபம் என்னுள்ளே எரியும் போது
போர்த்தி தூங்கும் உடலும் புழுக்கம் கொள்ளத் தயங்குது
ஏட்டில் எழுதி வைக்க என் மனையவள்
அருகில் வேண்டும்.

## இளமையின் சுகங்களை ரசிக்கவா

இளமையின் சுகங்களை ரசிக்கவா - உன்
இளமையின் சுகங்களை சுவைக்கவா
இளமைகள் திரும்புதல் இல்லையே - பின்
இரவுகள் இனிப்பதும் இல்லையே.

கவிமயில் கம்பனின் சொந்தமோ - அவன்
புனைத்திட்ட கவிகளின் உவமையோ - என்
கண்களில் வாழ்ந்திடும் தேவியே - உனை
காத்திடும் நாயகன் நானன்றோ.

தனிமையில் தந்திட வெட்கமோ - இத்
தரணியில் இவையெல்லாம் புதுமையோ - அது
தாய்மையாய் மாற்றிடும் அர்த்தமே - நற்
தாரமே உனக்கென்றும் சொர்க்கமே.

மாலை தான் மனதினை மயக்குதே - பூ
மாலையும் உறவினை தொடுத்ததே - என்
பூவையும் புதுமகள் இல்லையே - தினம்
காலைகள் நமக்கென்றும் தொல்லையே.

# ஆத்தோரம் ஜோடி சிரிப்பாய் பாடும்

ஆத்தோரம் நீ வாடி... ஓடி
ஆசையாக நான் பிடிக்க - மீனு
ஐஞ்சாறு பிடிச்சாலும் - அதை
ஐக்கியமா உண்ணுவோம்
அந்தியிலே நீ வாடி.

மச்சான் என் மனதினிலே - குண்டு
மகராணி உன் நினைப்பு
மீனைப் போல சுவைக்குதடி - தப்புண்ணா
தேனைப் போல இனிக்குதடி - ஆஹா
இரண்டு போலும் இருக்குதடி.

மீசை வச்ச மாமன் மகன்
ஆசை வச்சு நானிருக்க
காசை வைச்சு எந்தப் பய ஜெயிக்கிறது - உன்
தோசை சுட்டு எந்தப் பய ஊட்டுறது..நோ...நோ..
தோதாக எந்தப் பய புறக்கிறது.

வேதங்கள் பேசவில்லை - நான்
வேசங் கூட போடவில்லை.
வெய்யிலில் நிண்ணுக்கிட்டு காயிறேன் - அதில்
வெந்துகிட்டே தினந்தினம் சாகிறேன் - உன்
மாலை ஒண்ணு வேணுமெண்ணே பாடுகிறேன்.

மாதங்கள் போகுதடி - என்
பாதங்கள் நோகுதடி
பதமான அல்வாவே ஓடி வா... ஆஹா..
பசீ தீர உண்ணப் போறேன் ...நாடி வா..
பண்புடனே வாழ்ந்திடுவோம் கூடிவா..

# நீயின்றி வாழ்வு நிலைபெறுமா?

ஆலமரம் சாய்ந்தால் அறி நின்ற பறவை
யாரை இனி துணையாக்குமோ - இந்த
ஆறுகடல் காய்ந்து அமைதியை கண்டால் - அந்த
மீன்களினம் உயிர் வாழுமோ.

வான் நிலா வெண்மை வண்ணமயமானால்
வானவில் என்னாகுமோ - அது
வளைந்திட்ட வடிவை முழுநிலவென்றால் - பின்
வளர்மதிக்கென்ன நாமமோ

புயலுக்குப் பின்னும் பூவினம் எல்லாம்
பொலிவுறும் என்றால் - இந்த
பூவையவள் மனமும் மறந்திட்ட பின்பும்
புதுவாழ்வு எனக்காகுமோ

காற்றடித்த பக்கம் காகிதமும் போகும்
காலமென்னும் வாழ்நாளிலே - நான்
பாத்தெடுத்த பக்கம் படித்திட முன்னே - அது
பறந்திடல் முறையாகுமோ

வேலியே பயிரை மேய்கின்ற கதையை
வெளிச்சமாய் நான் காண்கிறேன் - இது
வெற்றிலையை போட்டு எச்சிலை உமிழும்
வெறும் கதை என்றாகுமோ

பாலைவனம் என்றும் பசுமையை தருமே
பழங்கதை உருமாறிவிட்டால் - நான்
பாழடைந்த மனையின் பள்ளி கொள்ளும்
பாவி பசுமை உருவாகுமோ

# புண்பட்ட மனம் புழுங்குகின்றது

பார்ப்பதற்கு பசுவுங்க - நான்
பணிவுள்ள ஆளுங்க - எனை
ஏய்ப்பதினி வீணுங்க - இது
ஏர் பிடித்த கையுங்க.

கால் கடுக்க நின்னுங்க - நான்
கலை வளர்த்து வந்தேங்க - பூனை
பால் குடிக்கும் பாணியிலே - சிலர்
பழி வாங்கி விட்டாங்க.

போட்டி என்று வந்தாக்கா -நாம்
புறமுதுகு காட்டோமுங்க சிலர்
பொறாமையுடன் புகுந்ததினால் - மனம்
புண்பட்டு போச்சுங்க.

பண்புள்ளோர் நட்பு வந்ததுங்க - மீண்டும்
பாரினில் வாய்ப்பும் அழைத்ததுங்க - அதை
பணிவுடன் நாமே ஏற்றுங்க - என்றும்
பலர் போற்றும் வழியில் வாழ்வோமுங்க.

## கிளிநகர் சொர்க்கம்தான்

ஈழத்தில் பிறந்த எனக்கு
கிளிநகர் தானே சொர்க்கம் - அந்த
இயற்கை கொஞ்சும் மண்ணை - இந்த
உலகம் போற்ற வைப்பேன்.

நாடகம் நடிப்புகள் கண்டேன் - நல்
நாட்டிய இசையும் அறிந்தேன் - அதை
வாழ்த்திய உள்ளங்கள் துணையால் - இன்ப
வானலையினிலும் பறந்தேன்.

நீதியின் சோதனை திரையால் - பல
நிஜங்களை அறிந்தேன் கலையில் - உன்
நினைவுகள் நித்திரையல்ல - என
நீக்கினர் மக்கள் திரையை

கலைஞர்கள் ஒத்துழைப்புண்டு - அதை
கண்போல் காத்து வாழ்ந்து - கல்வி
கற்றோர் பெரியோர் போற்றும்
கலைப்புரட்சியார் வழியில் செல்வேன்.

## வானத்து தேவதை வந்தாள்

வானத்தில் தேவதை பறக்கின்றாள் - என்
வாழ்வில் ஒளிதர வருகின்றாள் - தன்
வளைக்கரத்தாலும் அழைக்கின்றாள் - பின்
வருங்கால துணையே தானென்றாள்.

வெண்ணிலவே தன் தந்தையென்றாள் - அது
வெளிவிடும் ஒளியை தாயென்றாள்
விண்மீன் கூட உறவென்றாள்.
வீசும் தென்றலே தானென்றாள்.

கருமுகிலெல்லாம் தன் கலக்கமென்றாள்
கண்ணீர் வருவதை மழையென்றாள்.
இடி மின்னல் தனது கோபமென்றாள் - பின்
இடைவெளி வருவதே அமைதியென்றாள்.

ஆதவன் தனையும் மாமனென்றாள் - அவன்
அளித்திடும் ஒளியை தன் சிரிப்பென்றாள்
வானத்து வில்லையும் மண மாலையென்றாள் - அதை
வாங்கிடும் தோளும் தனதேயென்றாள்.

## மூடனின் கவிக்கு முடிவேது

மூடன் ஒருவன் கவிபுனைந்தான் - அதன்
முடிவினிலே அவன் தொடர் வரைந்தான்.
முடிந்ததையெல்லாம் ஆக்கிவிட்டான்
முடிவினில் தானே தவறிவிட்டான்.

முள்வேலி மீது உலர வைத்தான் - அதை
மொய்த்தள்ளும்போது தவறு விட்டான்.
முந்தானை இன்றி தவிக்கின்றான்- இப்போ
முள்மீதும் பழியை சொல்கின்றான்.

மூடு பனி மீது உறக்கம் கொண்டான்
முனிவனைப் போல வாழ்வும் கண்டான்.
மந்தாரமான நிலையுடனே - தினம்
மண்தரையில் கவியைப் புனைகின்றான்.

மூடுதிரை பின்னே மேடையிட்டான் - அதில்
பாடும் கவியாலே முழக்கமிட்டான் - தன்
முதல் தர வாழ்வும் இது என்றே - தினம்
மோகன புன்னகையில் வாழ்கின்றான்.
வாழ்ந்தாலும் வாழ்க்கை என்றும் மாறாதே
வருங்காலம் என்றும் எங்கும் மாறாதே

## கல்லும் கனியும் கன்னி கனியாது

கல்லுக்குள் ஈரமில்லை தான் - அது
கனியாத திண்மமென்பதால் - நம்
காதலில் வைரமில்லை தான் - அது
கடல் நீரில் வளர்ந்ததென்பதால்

நாட்களும் நாலு இல்லை தான் - அது
இயற்கைக்கு மாறு என்பதால்
நான் கூட மாறவில்லை தான் - அந்த
இறைவனும் சாட்சி என்பதால்

நல்லவர் நினைப்பும் பிழை தான் - அது
நடப்பதே இல்லை என்பதால் - நீ
சொந்தமும் எனக்கில்லை தான் - இன்னும்
துணையாகவில்லை என்பதால்

மண்ணுக்கும் மகிழ்ச்சி இல்லைத் தான்
மழை நீரும் இல்லையென்பதால் - என்
சொல்லிலும் சுகமில்லை தான் - நான்
தூரத்துப் பச்சை என்பதால்

சோதனை நிகழ்வதும் உண்மை தான்- நான்
பாவத்தின் பிறப்பு என்பதால்
சாதனை மலர்வதும் உண்மை தான் - சிலர்
சரித்திர புருஷர் என்பதால்

கதிரவன் வரவும் நலம் தான் - பல
கண்ணுள்ள உயிர்க்கு துணையென்பதால்
கம்பனின் கவியும் பிழை தான் - சில
கன்னியர் வாழும் முறையால்

# இதயம் தரவேண்டும்

"ராஜாவின் ராகங்கள்" வீடியோப் படத்தில்

ஆண் :
இதயத்தை தரவேண்டும் கண்ணே - என்
இதயத்தில் இருக்கும் பெண்ணே
உன் இதயத்தை தருவாய் என்றால் என்
இதயத்தை தருவேன் கண்ணா

பெண்:
குங்குமம் தரவேண்டும் கண்ணா - என்
குங்குமமான மன்னா
குங்குமம் தருவாய் நீ என்றால் - இந்த
குங்குமம் இன்பம் கொள்ளும்

ஆண்:
இதயத்தை தந்த பெண்ணே - என்
இதயத்தில் இருக்கும் கண்ணே - உன்
இதயம் தந்த இன்னாள் - என்
இதயம் உனையே வாழ்த்தும்

பெண் :
குங்குமம் தந்த மன்னா - என்
குங்குமமான கண்ணா
குங்குமம் இட்ட என் முகத்தை -உன்
குங்குமம் வாழ்த்தும் என்றும்

# ராஜாவின் ராகங்கள்

'ராஜாவின் ராகங்கள்'வீடியோ படத்தில்

ராஜாவின் ராகங்கள்
ரதி தேவி உனக்காக - புது
றோஜாவைப் போன்றவளே - உன்
ராஜாவை மறக்காதே

சந்தணத்தை நிறமாய் கொண்டாய்
சந்திரனை முகமாய் கண்டேன் - இன்று
வந்தனத்தை பாடி வந்து - உன்
வார்த்தையினை நாடி நின்றேன்.
வளைகரத்தால் இதழ்மூடி
வரும் சிரிப்பை மறைப்பதென்ன

இந்திரனின் தங்கையென்றே
இளமையிலே காதல் கொண்டேன் - நீ
ஈட்டிமுனை பார்வையினால் - என்
இளமையை எய்யாமல்
இருகரமும் சேரும் நேரம்
என்றென்று கூறிடம்மா

# புதிய பூக்களே மலருங்கள்

"ராஜாவின் ராகங்கள்" வீடியோப் படத்தில்

புதிய பூக்கள் மலர வேண்டும்
பூத்துக் குலுங்கி வாழவேண்டும்
புதுமை விரும்பி மணக்கும் வேளை
பழமை தனையும் காக்கவேண்டும்.

அன்பும் பண்பும் கொண்டும் என்றும்
அனைத்துக் கலையும் கற்று நீங்கள்
ஆயிரத்தில் ஒருவன் போல
ஆழவேண்டும் மக்கள் மனதை
ஏழை எளியோர் தோழனாகி
ஏற்றம் காண உழைக்கும் வேளை
மாற்றம் ஒண்ணா மலர என்றும் மகிழ்ச்சி
பொங்க சிறக்கவேண்டும்.

அள்ள அள்ளத் தானே கிணற்றில்
ஊற்றும் பெருகும் உவமை போல
கொடுத்து உதவி வாழ்த்தி நின்றால்
கோவில் என்றா வணங்கும் உலகம்
உன்னை நீயே அறிவாய் மனிதா
உள்ளம் உறுதி கொண்டு தோழா
உண்மை காத்து வாழுறோம்
உயர்வு உன்னைத் தேடி வருமே.

## சின்ன மணிக்குயிலே

'ராஜாவின் ராகங்கள்'வீடியோ படத்தில்

சின்ன மணிக் குயிலே
சின்னமணிக் குயிலே
எந்தன் மனக் குறையை
தீர்த்து வைக்கும் மயிலே
ஏ. . . இங்க வாடி
என்னோடு பாடி
ஒன்றாக கூடி
இன்பங்கள் காண்போம் கோடி

அத்தை மகன் எனக்கு
ஆயிரம் ஆசை - இன்று
முத்தமழை பொழிந்து
வித்தைகள் படைப்பின்
சத்தமின்றி தருவாய்
சக்கரைப் பொங்கல் என்று
நித்தம் அதை சுவைப்போம்
நிலவே மலரே

ஆ. . . ஆ. . . ஆ. . . ஆகா. வாடி
என்னோடி பாடி
ஒன்றாக கூடி

# உப்பா சீனியா நாவுக்குத்தான் தெரியும்

பி. லோகதாசின் 'நீந்தத் தெரியாத மீன்கள்' வீடியோ நாடகத்தில்

உப்பா சீனியா உன் நாவுக்குத் தான் தெரியும்
தப்பா சரியா உன் மனதுக்குத் தான் புரியும்
உப்பு ஆனா நீரால் கழுவு - நீ
தப்பு செய்தா தவறை திருத்து
உன்னை நீ தான் திருத்திடணும் - நீ
உத்தமனாகிடணும்.
(உப்பா)

திட்டம் போட்டு குற்றம் செய்து
நித்தம் சொகுசாய் வாழ்ந்திடும்
சட்டம் தர்மம் தடுத்து திருந்த
சந்தர்ப்பத்தை தேடுது
நீயே தான் திருந்திடணும் - என்றும்
நிலையாய் வாழ்ந்திடணும்.
(உப்பா)

பூனைக்குள்ளே புனுகுமுண்டு - நல்ல
பூவும் சேற்றில் மலர்வதுண்டு.
வானைப் பிளந்து மீனைத்தேடும்
வர்க்கம் சேராதே
வஞ்சம் கொண்ட
நெஞ்சைக் கண்டும் - தலை
வணங்கிக் கொள்ளாதே
ஏணியாய் நின்றிடணும் - தம்பி
தோணியாய் இருந்திடணும்.
(உப்பா)

# மாற்றம் தேடும் மனங்களே

ரி. தயாநிதியின் 'மாற்றம் தேடும் மனங்கள்'வீடியோ நாடகத்தில்

மாற்றம் தேடும் மனங்களே
சமுதாய தூண்களே - உங்கள்
மனதில் உள்ள சோகத்தை
சொல்லுங்கள் - என்றும்
சொல்லில் அடங்காத துன்பங்கள்

பிரிவு இது கொடுமை - அட
ஏன் தான் இன்னும் மனிதா
காலம் மாற்றம் காணும் - அந்த
காட்சி கண்ணில் தோன்றும்
வேளையே வேளையே ஓடி வா....

சதையில் உள்ள பிடிப்பு - சுகம்
முடிந்தால் ஏன் வெறுப்பு
இருட்டுக்குள்ளே இணங்கி வைத்து
இனிக்க இனிக்க இன்பம் கண்டு
கிணற்றுக்குள்ளே தவளை போலவே
வாழும் முறை தான் எங்கு உண்டு.

புனிதர் யாரும் சொன்னதில்லை - எந்த
புத்தகமும் இதை எழுதவில்லை
பத்துமாத சிறையில் கூட
பாழும் பிரிவை அறிந்ததில்
பாவிகள் பார்வையில் - என்றும்
ஆறடி மாறுமா ? மாறுமா?

# நீந்தத் தெரியாத மீன்களே

பி. லோகதாசின் 'நீந்தத் தெரியாத மீன்கள்' வீடியோ நாடகத்தில்

நீந்தத் தெரியாத மீன்களே
வாழத் தெரியாமல் வருந்தியே
விழியில் வரும் நீரை அருந்தியே
வெளியில் மழை தேடி குளிக்குமே
நீந்தத் தெரியாத மீன்களே - உங்கள்
காலம் கரை சேரும் என்று தான்
(நீந்தத்)

ஜாலம் போடும் கூட்டத்தில்
ஆலம் வேராய் யாருண்டு - நட்பு
பாலம் போட துணிவில்லை இவர்க்கு
பாலும் விஷமாய் தோன்றுமே
(நீந்தத்)

வேலி இல்லாப் பூமியில்
போலி வாழ்க்கை - ஏனடா
காலம் சுழலும் வேகத்தில்
கண்ணாமூச்சி ஆட்டமேன்
(நீந்தத்)

# மலர் இல்லா மாலை

ரி. தயாநிதியின் 'மலர் இல்லா மாலை' வீடியோ நாடகத்தில்

மலர் இல்லா மாலை - இவன்
வாழ்க்கை கோலம்
இனி வாழ்வு ஏனோ
இதுவும் ஏனோ
புதுப்பாலம் போட்டு
புனர்வாழ்வு எதற்கு
(மலர்)

கன்னியரின் கண்ணில் மட்டும்
கண்ணீராமோ - இந்த
காளையரின் கண்ணில் கூட
கண்ணீர் கோலம்
மணக்கோலம் காணும் - அந்த
மரணம் வேண்டாம்
சீதனக் கொடுமை தந்த
துன்பம் போதும்
(மலர்)

நால்பத்து காலம் தொட்டு
வாழும் இவனை - யாரும்
ஜாலங்கள் இங்கே போட்டு
மாய்த்தது என்ன
எட்டாத கோலம் இவனும்
போட்டதன் பின்னே
வற்றாத கண்கள் குளமாய்
போனதுமென்றோ
(மலர்)

## குடிப்பது குற்றமா?

நான் குடிப்பது எதற்கு எனக்கே இன்னும் புரியாது - இந்த
கோவில்கள் எதற்கோ இருக்கு அதுவும் புரியாது பலர்
கேள்விகள் தொடுப்பு இன்னும் ஏனோ புரியாது - நான்
கேட்டால் பதிலை தருவோர் யாரும் கிடையாது.

குடிப்பவன் மனதில் குறைகள் என்றும் இருக்காது
கூடும் வாழ்வில் குழப்பம் வரும் தான் மறுக்காது
குற்றம் கூட செய்யத் தூண்டும் தடுக்காது - குடி
கொலையும் கூட செய்ய என்றும் தயங்காது.

பணத்தால் கூட குடியை பிரிக்க முடியாது - கடும்
பாசம் கூட அழிக்க என்றும் முடியாது - அப்
பிரிவைக் கூட மதுவே காக்கும் சரியாகும் - பின்
பிணமாய் போனால் உண்மை எல்லாம் புலனாகும்.

மங்கையின் பிரிவை மதுவே தீர்க்கும் மருந்தாகும் - சில
தங்கம் வந்தால் அதையும் பிரித்து துணையாகும் - அதில்
பங்கம் வந்தால் பாழும் வாழ்வும் உண்டாகும் - சில
பயனற்ற பெண்கள் இவற்றை அறியும் நிலை வேண்டும்.

## கண்ணீரில் பல வர்ணங்கள்

கண்ணீரில் நான் கண்டேன் பல வண்ணங்கள் - அதில்
காற்றோடு போகின்ற உந்தன் பேச்சாள மாற்றத்தை
கிளியே ஏன் மறந்தாய் உயிராய் நான் வரைந்தேன்
கனியும் அந்த பழமும் கொடும்புயலாய் பாழானது

துணையாக உனை தேடி நான் வந்தேனே - கற்
தூணாக நீ மாறி வலம் வந்ததேன்
எந்தன் பாசம் உந்தன் வேசம்
எல்லாமே இடியோடு மழையானது.

விழியாலே கதை சொன்ன அக்காலமும் - எனை
வேண்டாத உறவென்னும் இக்காலமும்
புதுக்கனவோ வெறும் நினைவோ
எல்லாமே என்னென்று புரியேல்லடி

அன்னைமார் அடியோடு வெறுத்தாலுமே - நான்
அயலூரில் சில காலம் வாழ்ந்தாலுமே
எந்த நாளும் எந்த நேரம் - நான்
உனக்காக உயிர் வாழ்ந்தவன்.

## தாங்குமா என்நெஞ்சம்

தாங்குமா எந்தன் நெஞ்சம் தாங்குமா
உன்னால் வந்த துயர உலகை விட்டு நீங்குமா
எதையெல்லாம் நினைத்தது ஏதேதோ நடந்தது
கதையெல்லாம் கலைந்து கண்ணீரும் வந்தது
காலத்தின் கோலத்தால் பழியார் மீது சொல்வது

விழிகளும் கலந்ததேன் விருந்தும் கண்டதேன்
வேண்டாத வம்புகள் தோன்றிடத் தானோ
விம்மலும் பிறக்குதே விழி நீரும் சுரக்குதே
விழிக்கு இமையின் துணை வேண்டாமென்றோ

யானைக்கு தந்தம் சுமையாகி விடுமோ
மானுக்கு வேடன் துணையாகலாமோ - நீ
கானுக்குள் தோன்றும் நீராக வேண்டுடாம் - ஏதும்
கனிந்த பின் உலகில் காயாவதுண்டோ

தேனுக்கு வண்டு பகையாவதுண்டோ
தெளிந்த நம் அன்பு கலங்குதல் நன்றோ
புயலுக்குப் பின்னும் பூப்பதென்றால் - உன்
புதுப்பாதை தப்பு இனி என் பாதை பற்று

# ஆசைகள் என்னாளும் தீராது

அத்தானின் ஆசைகள் என்னாளும் தீராது - உன்
ஆசை என்ன என்ன சொல்லம்மா - அதை
என்னாளும் தீர்த்து வைப்பேன் நானம்மா

துணையென்னும் மானம்மா - உனை
தொட்டாலும் என்னம்மா
துடிக்காதே எந்தன் கண்ணம்மா - உன்
துன்பங்கள் போக்கும் மன்னன் நானம்மா.

விழியாலே பேசாதே வேண்டாமென சொல்லாதே
வீரமும் பேசி என்னை ஜெயிக்காதே
வேண்டாத வம்புக்கென்னை இழுக்காதே - பின்
வேடிக்கை காட்டி என்னை மயக்காதே.



# உறவு இங்கும் அங்கும்

வாழ்க்கை கோடி அதன் பாதையும் கோடி
வாழ்ந்திடும் ஜோடி ஆலையாகிவிடும் போது
துணையாகிவிடும் உள்ளம் எங்கே நீ சொல் - கருங்
கல்லான கடவுள் தான் உண்டோ .... இங்கு
வானமே மழையாய் நீ சொல் இன்று
பூமி தான் நீ சொல் புயலாய் இன்று

இளமையின் வேகம் இரு உள்ளம் சேரும்
இனித்திடும் வாழ்வைத் தான் அவை நாடும் - புதிய
இன்பங்கள் கோடி எனத் தான் கூறும்.. ஜோடி
இனி என்ன உலகு என்றே சொல்லும் ..பருவமது

பெண்:
மணக்கோலம் வேண்டும் துணைக்காக என்னும்
மாறாத மனதை கொண்டவண்ணா.... என்றும்
உனக்கேற்ற உறவும் உண்டு இங்கே - நம்
உள்ளன்பும் உறங்காதென்றும் நீ கொள் மன்னா.

ஆண் :
என்றேனும் ஓர் நாள் இருளான வாழ்வில்
எரிந்திடும் தீபம் எனக்கொள்... பெண்ணே
ஏழைக்கும் வாழ்க்கை உண்டு எனச்சொல் - பின்பு
என்றென்றும் வழக்கும் இல்லை நமக்குள்

இருவரும்:
ஒன்றான உள்ளம் ஒளி விடும் தீபம்
ஒருபோதும் அணைவதில்லை என்போம் நாமே
பூமியில் அணைத்தாலென்ன என்போமே - என்றும்
வானகம் நமக்கே உண்டு காண்போமே ...நாமே

# பிரியாலயம் துரைஸ்



ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நிச்சயமாய்
ஏதாவது ஒருதிறமை இருக்கும்
என்பதை ஆணித்தரமாய் நம்புபவன்
நான்!

தம்மிடமுள்ள திறமைகளை
வெளிக்கொணர ஒவ்வொருவரும்
முயற்சிக்க வேண்டும் என்றும்
விரும்புபவன் நான்!!

அதனால்தான் எவராவது தமது
ஆக்கங்களை வெளிக்கொணர
விரும்புகின்றபோது அவர்களுக்கு உதவ
முயன்றிருக்கின்றேன்!!!

பிரியாலயம் துரைஸ்.

பழகுவதற்கு இனியவர் மட்டுமல்ல--

அவர் பின்னால் பல திறமைகள்
மறைந்து இருக்கின்றன என்பதை
பலரும் அறிவர்.
இனிமையான அறிவிப்பாளர்.
நல்ல நடிகர்.
தரமான இயக்குனர்.
நேர்த்தியான படப்பிடிப்பாளர்.
காத்திரமான பாடலாசிரியர்.
மொத்தத்தில் அவர் ஒரு பல்துறைக்
கலைஞர்.
அது மட்டுமல்ல--
அவர் ஒரு நல்ல மனிதரும்கூட.

--'ரஜனி' குகநாதன்

ரஜனி பதிப்பகம்